பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

14 09 2025 7 15

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பாதுகாப்புத் தளவாட கொள்முதல் விதிமுறைகளுக்கு பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத்சிங் ஒப்புதல் அளித்துள்ளார்.

2. மிசோரம் மாநிலத்தில் இருந்து நாளை முதல் சரக்கு ரயில் சேவை தொடங்க உள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்னிவி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. வருமான வரி கணக்கு தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் இன்றுடன் நிறைவடைகிறது.

4. ஜனநாயகம் தழைத்தோங்க மனித உரிமைகளும், அடிப்படை சுதந்திரமும் நிலைநாட்டப்படுவது அவசியம் என்று ஐ.நா. பொதுச்செயலாளர் திரு.ஆன்டனியோ குட்டரெஸ் வலிறுத்தியுள்ளார்.

5. இஸ்தான்புலில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சத்யன் ஞானசேகரன் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<<<<>>>>

பாதுகாப்புத் தளவாட கொள்முதல் விதிமுறைக் குறிப்பேட்டிற்கு, பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் ஒப்புதல் அளித்துள்ளார்.

இதுகுறித்து, பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கொள்முதல் நடைமுறைகள் எளிமைப்படுத்தப்பட்டு, புதுமைக் கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதன் மூலம், உள்நாட்டுத் தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில், மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழலில், பாதுகாப்புப் படைகளின் தேவைகளுக்கேற்ப இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும், முப்படைகளிடையேயான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதற்கான அம்சங்களும் இதில் இடம்பெற்றுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மிசோரம் மாநிலத்தில் இருந்து நாளை முதல் சரக்கு ரயில் சேவை தொடங்க இருப்பதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்னிவி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், அம்மாநிலத்தின் Bairabi-Sairang இடையிலான புதிய ரயில் பாதையை பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்று முன்தினம் தொடங்கி வைத்த நிலையில் மிசோரத்தில் இருந்து தலைநகர் தில்லி, குவஹாத்தி உள்ளிட்ட இடங்களுக்கு நேரடி பயணிகள் ரயில் சேவை இயக்கப்பட்டு வருவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் தொடர்ச்சியாக சரக்கு ரயில் சேவை தொடங்கப்படுவதன் வாயிலாக சிமெண்ட், இரும்புக் கம்பி உள்ளிட்ட கட்டுமானப் பொருட்களும், வீட்டு உபயோகப் பொருட்களும் மிசோரம் மக்களுக்கு இனி குறைந்த விலையில் கிடைக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரயில்வே துறையின் இந்த நடவடிக்கை அம்மாநில மக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி இருப்பதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

<<<<>>>>

வேவ்ஸ் OTT தனித்துவமான தளமாக திகழ்கிறது என்று தகவல் ஒலிபரப்புத்துறை செயலாளர் திரு. சஞ்சய் ஜாஜு கூறியுள்ளார்.

பட்னா ஆகாஷ்வானி நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த தளம், வருங்காலத்தில், வீடியோக்களை பகிர்ந்துகொள்ளும் வகையில் மேம்படுத்தப்பட உள்ளதாக தெரிவித்தார்.

ஆகாஷ்வானி மற்றும் தூர்தர்ஷன் நிகழ்ச்சிகளுடன், தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் வெளியீட்டுப் பிரிவால் வெளியிடப்படும் இதழ்களும் இந்த தளத்தில் கிடைக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக, பாட்னா தூர்தர்ஷன் நிலையத்தில், தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்திற்குட்பட்ட அனைத்துப் பிரிவுகளையும் சேர்ந்த அதிகாரிகளின் ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்ற திரு.சஞ்சய் ஜாஜு, தகவல்களை கடைக்கோடியில் உள்ள மக்களுக்கும் கொண்டு சேர்ப்பதில், மாநில மொழி ஊடகங்கள் முக்கியப் பங்கு வகிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

<<<<>>>>

2024-25ஆம் நிதியாண்டிற்கான வருமான வரி கணக்கு தாக்கலுக்கான கால அவகாசம் இன்றுடன் நிறைவடைகிறது.

இந்த அவகாசம் நீட்டிக்கப்படமாட்டாது என்று வருமான வரித்துறை தெரிவித்துள்ளது.

மேலும் இம்மாதம் 30ஆம் தேதி வரை அவகாசம் நீட்டிக்கப்படுவதாக வெளியான தகவல்கள் முற்றிலும் தவறானது என்றும் வருமான வரித்துறையின் அதிகாரபூர்வ இணையதள பக்கத்தில் வெளியாகும் தகவல்களை மட்டும் கவனத்தில் கொள்ளுமாறு அத்துறை அறிவுறுத்தியுள்ளது.

கணக்கு தாக்கல் குறித்த உதவி தேவைப்படுவோர், வருமான வரித்துறையின் 24 மணி நேர உதவி மையத்தை தொடர்புகொள்ளுமாறும் வருமான வரித்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

சர்வதேச ஜனநாயக தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

கடந்த 2007ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச்சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இந்நாள் கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி ஐ.நா. பொதுச்செயலாளர் திரு. ஆன்டனியோ குட்டரெஸ் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், மக்களின் உறுதிப்பாடு காரணமாக ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டிருப்பதாக கூறியுள்ளார்.

ஜனநாயகம் தழைத்தோங்க மனித உரிமைகளும், அடிப்படை சுதந்திரமும் உறுதிப்படுத்தப்படுவது அவசியம் என்றும் அவர் வலிறுத்தியுள்ளார்.

கண்ணியம் மற்றும் அமைதிக்கான சக்தியாக ஜனநாயகம் திகழ அனைவரும் இணைந்து பணியாற்ற இந்நாளில் உறுதியேற்போம் என்றும் திரு. ஆன்டனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மத்திய அரசு மேற்கொண்ட சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைக்கு அனைத்துத் தரப்பினரும் வரவேற்பு தெரிவித்து வருகின்றனர்.

உணவுப் பொருட்கள் மீதான வரி 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதற்கு தமிழகத்தின் வேலூரைச் சேர்ந்த ஹோட்டல் உரிமையாளர் சங்கத்தினர் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதற்காக சாமானிய மக்கள் அரசுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

இந்தியன் வங்கியின் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம் மூலம், படித்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு இலவச தொழில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

18 முதல் 45 வயதிற்கு உட்பட்ட கிராமப்புற ஆண் மற்றும் பெண்களுக்கு அளிக்கப்படும் இந்த தையல் பயிற்சி, மிகவும் பயனளிப்பதாக தமிழகத்தின் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த கல்பனா தெரிவித்தார்.

<<<<>>>>

கேரள சட்டப்பேரவைக் கூட்டத்தொடர், திருவனந்தபுரத்தில் இன்று தொடங்குகிறது.

12 நாட்கள் நடைபெறும் இந்தக் கூட்டத்தொடரில், பல்வேறு முக்கிய மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டு, விவாதிக்கப்பட உள்ளது.

குறிப்பாக, மனிதர்கள் வசிக்கும் பகுதிக்குள் நுழையும் வனவிலங்குகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடைமுறைகளை மாற்றியமைப்பது குறித்த மசோதா இந்தக் கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்பட உள்ளதாக கேரள அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

<<<<>>>>

ரஷ்ய ட்ரோன்கள், Romania எல்லைக்குள் அத்துமீறி பறந்ததாக, அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் குற்றம்சாட்டியுள்ளது.

யுக்ரைனை ஒட்டிய எல்லைப் பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள தங்கள் நாட்டின் போர் விமானங்கள், ட்ரோன் பறந்ததை உறுதிப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த ட்ரோன் குடியிருப்புப் பகுதிகளுக்குள் நுழையவில்லை என்றும், அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் எந்த செயலிலும் ஈடுபடவில்லை என்றும் Romania பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நேட்டோ அமைப்பில் யுக்ரைன் சேருவதை எதிர்த்து அந்நாட்டின் மீது தாக்குதல் நடத்திவரும் ரஷ்யாவின் மூன்று ட்ரோன்கள், நேட்டோ உறுப்பு நாடான போலந்து எல்லைக்குள் சுட்டு வீழ்த்தப்பட்ட நிலையில், மற்றொரு நேட்டோ உறுப்பு நாடான Romania-விலும் ரஷ்ய ட்ரோன்கள் அத்துமீறி பறந்திருப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

<<<<>>>>

இஸ்தான்புலில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சத்யன் ஞானசேகரன் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 12-10, 11-7, 11-7 என்ற செட் கணக்கில் ஜப்பானின் Okano Shunsuke-ஐ வென்றார்.

------------

ஆசிய ஜூனியர் ஜூடோ சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

இந்தோனேஷியாவின் ஜகார்தாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 78 கிலோ எடைப் பிரிவில் Ishroop Narang வெள்ளிப் பதக்கம் வென்றார்.

Chanu Khaidem 70 கிலோ பிரிவிலும், Kanwarpreet Kaur 78 கிலோ எடைப் பிரிவிலும் வெண்கலப் பதக்கம் வென்றனர்.

------------

கிராண்ட் ஸ்விஸ் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் வைஷாலி முதல் இடத்தில் உள்ளார்.

உஸ்பெகிஸ்தானின் சமர்கண்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 10வது சுற்று முடிவில் அவர் 7 புள்ளி 5 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

---------------

ஆசியக் கோப்பை மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா வெள்ளிப் பதக்கம் வென்றது.

இந்திய அணியின் வெற்றிக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் மத்திய அமைச்சர்கள் பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

-------------

ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்றது.

துபாயில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த பாகிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவலில் 9 விக்கெட் இழப்புக்கு 127 ரன் எடுத்தது.

128 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்திய அணி 15 புள்ளி 5 ஓவரிலேயே 3 விக்கெட் இழப்புக்கு 131 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

சூர்யகுமார் யாதவ் அதிகபட்சமாக 47 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

<<<<THE END>>>>